# மன்னிப்புக் கேட்பது எப்படி
# [21:40-22:29]

*மன்னிப்புக் கேட்பதைப் பற்றி நான் நினைக்கும்போது, நானும் எனது சகோதரன் காய் அவர்களும் சிறுவர்களாய் இருந்தபோது மேற்கொண்ட சச்சரவுகள் என் நினைவுக்கு வருகின்றன. எங்களது அவமதிப்புகள் தகாதவைகளாகும் போது, எங்களின் அன்னையார் இடையிடுவதுண்டு. அவர்கள் எங்களை முகத்துக்கெதிரே முகம் வைத்து நிற்கச் செய்து, "மன்னிப்புக் கேள்" என்று கட்டளையிடுவதுண்டு. நாங்கள் எங்கள் கால்களை உதைத்துக் கொண்டு, எங்காவது பார்த்துக் கொண்டே, "நான் வருந்துகிறேன்" என்று ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக் கொள்வோம். அதன் பிறகு சில வேளைகளில் அன்னையார் எங்களைக் கை குலுக்கிக் கொள்ளும்படி செய்வார்கள். நாங்கள் குறிப்பாக இரக்கமற்ற விதத்தில் நடந்து கொண்டிருந்தால், "இப்பொழுது கட்டிப்பிடித்துக் கொள்ளுங் கள்" என்ற பயங்கரமான கட்டளை கொடுக்கப்படும். நாங்கள் மறுப்புணர்வோடு ஒருவரை நோக்கி ஒருவர் சாய்ந்து, சோதனை உணர்வோடு ஒருவர் தோள் மேல் ஒருவர் கை போட்டு, சற்று நசுக்கிக் கொள்வோம். சில வேளைகளில் அவனோ நானோ சிரிக்கத் தொடங்கி விடுவோம் எல்லாம் மறுபடியும் சரியாகி விடும்.*

*துரதிருஷ்டவசமாக நம்மில் சிலர் மன்னிப்புக் கேட்கும் பொழுது "நான் வருத்தப்படுகிறேன்" என்று முணுமுணுப் பதற்கு அப்பால் வளர்ச்சியடைவதில்லை. சிலர் அந்த எளிய வார்த்தைகளைக் கூட கூற முடியாதவர்களாய் இருக்கின்றார் கள். சில வேளைகளில் நமது மன்னிப்புக் கேட்டலானது, தனது சகோதரியினிடத்தில் மன்னிப்புக் கேட்காவிட்டால் சிற்றுண்டி கொடுக்கப்படாது என்று கூறப்பட்ட சிறு பையனுடைய மன்னிப்புக் கேட்டல் போல் இருக்கின்றது. சற்று நேரம் அவன் முறுமுறுத்து விட்டு, தன் சகோதரியைப் பார்த்து: "நீ போய் ஆற்றில் குதிக்கும்படி கூறினேனல்லவா? எனவே ... நீ அப்படிக்*

*குதித்து விடாதே!" என்று வெடித்தான்.*

*இந்தப் பாடமானது - தேவையாயிருந்தாலும் - அப்படிப் பட்ட மன்னிப்புக் கேட்பது எப்படி என்பதைப் பற்றியதல்ல. மாறாக வேதாகமம் எதை "மன்னிப்புக் கேட்டல்" என்று அழைக்கின்றதோ, அதைப் பற்றி நாம் பேச விரும்புகின்றோம். 22:1ல் பவுல், "சகோதரரே, பிதாக்களே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங்களுக்குச் செவி கொடுப்பீர்களாக" என்று கூறினார். "நியாயங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை apologia*[1] *என்பதாகும், இதிலிருந்தே நாம்* "apology" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இருப்பினும் இந்த* "apology" *என்பது தவறு செய்ததை ஒப்புக் கொண்டதோ அல்லது மன்னிப்புக்கான ஒரு வேண்டுகோளோ அல்ல, ஆனால் இது, "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் ... உத்தரவு சொல்ல ..." (1 பேது. 3:15ஆ) என்று எழுதிய போது பேதுருவின் சிந்தையில் இருந்த கருத்தைத் தெரிவிக்கின்றது.*[2] Apologia *என்ற வார்த்தை நடபடிகளில் எட்டு முறைகள் வருகின்றது, அவைகளில் ஏழு முறைகள் அதிகாரங்கள் 22-26ல் உள்ளன,*[3] *இது யூதர்கள் மற்றும் ரோமானியர்களுக்கெதிராகப் பவுல் மறுபடியும் மறுபடியும் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் படி பேசிய போது கூறப்பட்டவைகளாகும்.*[4] *பவுலின் முதலா வது மன்னிப்புக் கேட்டல் அல்லது தற்காப்பு வாதத்தைப் படித்த பிறகு, நாம் விசுவாசமற்ற உலகின் முன்பு நாம் நமது சொந்த தற்காப்பு வாதத்தை நடைமுறைப்படுத்துவது எப்படி என்பதைக் காண்போம்.*

## *பவுலின் மன்னிப்புக் கேட்டல்*

*நமது முந்திய பாடம் முடிவடைகையில், தேவாலயத்தில் இருந்த கோபம் நிறைந்த ஒரு கும்பலில் இருந்து ரோமப் படைகளின் உள்ளூர் அதிகாரியால், பவுல் காக்கப்பட் டிருந்தார். அந்தோனியோ கோட்டைக்குள் பவுல் அழைத்துச் செல்லப்படுகையில், அதிகாரியிடம் அவர் பேசினார்: "ஜனங் களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாக வேண்டுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்" (21:39ஆ). பாதி உயிர் போகும்படி நான் அடிக்கப்பட்டிருந்தால், "என்னை*

*இங்கிருந்து வெளியே கொண்டு போய் விடுங்கள்! நான் விரும்பிய அளவு இக்கூட்டத்தில் எல்லாம் கண்டு விட்டேன்" என்று கூறியிருப்பேன். பவுலோ, "அவர்களுடன் பேசும்படிக்கு என்னை அனுமதியுங்கள்" என்றார்.[5] சேனாதிபதி தமது அனு மதியை அவருக்குக் கொடுத்தார் (21:40அ) - அநேகமாய் அவர், அந்தக் கலகத்தின் நோக்கம் என்ன என்பதை அதன் மூலம் கண்டு பிடிக்கலாம் என்று நினைத்திருக்கலாம்.*

## *யூதர்களுக்கு முன்பாக அவரது தற்காப்புவாதம் (21:40-22:23)*

*கீழே கூட்டம் நின்று கொண்டிருக்க, படிக்கட்டின் உச்சி யில் படை வீரர்களின் மத்தியில் பவுல் நின்று கொண்டிருந்ததை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. கிழிந்து போன அவரது ஆடையைத் தூசியும் இரத்தமும் மூடியிருந்தது, அவருடைய முகம் வெட்டுப்பட்டு, காயமடைந்திருந்தது. இருந்த போதிலும், அவர் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகக் கையசைத்தபொழுது தம்மைப் பற்றிய தெய்வீகப் பெருமித உணர்வுள்ளவராகக் காணப்பட்டார்.*

> *பவுல் படிகளின் மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயு பாஷையிலே[6] பேசத் தொடங்கினான்: சகோதரரே, பிதாக்களே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங் களுக்குச் செவிகொடுப்பீர்களாக[7] என்றான்.*
>
> *அவன் எபிரெயு பாஷைகளிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்ட பொழுது, அதிக அமைதலா யிருந்தார்கள் (21:40ஆ-22:2அ).*

*சேனாதிபதியிடம் பவுல் கிரேக்க மொழியில் பேசியிருந்தார் (21:37), ஆனால் தமது சக யூதர்களிடம் அவர், அவர்களின் சொந்த மொழியில் பேசினார். அவர் அவர்களை "சகோதரரே,[8] பிதாக்களே'' என்று அழைத்ததால் அவர்களைத் தமது குடும்பத்தார் என்று கூட ஒப்புக் கொண்டார். பவுல் தம் உரை யைக் கேட்பவர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள் வதன் மூலம் தமது தற்காப்பு வாதத்தைத் தொடங்கினார்.*

*அவர் அவர்களைப் புரிந்து கொண்டிருந்தார் என்பதை, அவர்கள் அறிய வேண்டுமென்று அவர் விரும்பினார்.[9]*

*அவர்களைப் போலவே, நியாயப்பிரமாணத்தை மதிக்கும் படியாகவே வளர்க்கப்பட்டிருந்தார். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அவர் எருசலேமில் வாழ்ந்திருக்கவில்லையென் பதாலும், பலர் அவரைத் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்க வில்லை என்பதாலும், அவர் தமது யூத வம்சா வழியை மறுகண்ணோட்டமாய்க் கொடுத்தார். அவர், "நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுப்பட்டணத்தில் பிறந்து" (22:3அ) என்று கூறினார். தர்சுவில் பிறந்ததினால் அவர் புறதெய்வ வணக்க மனநிலையைக் கொண்டிருந்ததில்லை என்பதை அவர் தம் உரையைக் கேட்டவர்களுக்கு உறுதிப்படுத்தினார் (22:3ஆ). அந்த நகரத்தில் அவர், "கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, [அவர்களுடைய] முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின் படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு" இருந்தார் (22:3இ). ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இறந்திருந்த கமாலியேல் அவர்கள், வாழ்ந்திருந்த ரபீக்களிலேயே மாபெரும் ரபீயாக அவர் கருதப்பட்டார். பவுலின் மத நம்பிக்கைகள் தவறாயிருக்க முடியாது.*

*பவுல் தமக்கு எதிரான குற்றச் சாட்டுகளுக்கு நேரடியாகப் பதில் கூறவில்லையென்றாலும், அவைகள் அடிப்படையில் உண்மையற்றவை என்பதை அவர் காண்பித்தார். பவுலின் மீது சாட்டப்பட்ட இரண்டு குற்றங்கள் பின்வருமாறு: (1) அவரது பிரசங்கமானது யூதமக்களுக்கெதிராகப் பேசப்பட்டது மற்றும் (2) அவர் வேதப் பிரமாணத்தை அவமதித்தார் (21:28). பவுல் அவரது தொடக்கக் குறிப்புகளில், "இதற்கு மாறாக, நான் ஒரு யூதனாயிருப்பதில் பெருமையடைகின்றேன், வேதப் பிரமாணத்தின்மேல் நான் எப்பொழுதுமே தனிச் சிறந்த மரியாதையை வைத்துள்ளேன்" என்றே கூறினார்.*

*"... வேதப் பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப் பட்டிருந்த" பவுல் "தேவனைக் குறித்து வைராக்கியமுள்ள வராய்" இருந்தார் (22:3ஈ) - எவ்வளவு வைராக்கியம் என்பதை விரைவிலேயே அவர் கூறவிருந்தார். அவர் அவ்வாறு செய்வ தற்கு முன்னர், "இன்றைய தினம் நீங்களெல்லாரும் ... இருக்கிறது போலவே" (22:3உ) என்ற திகைப்பூட்டும் வார்த்தை களைச் சேர்த்தார். சற்று நேரத்திற்கு முன் அவர் மரண மடையும்மாறு வைராக்கியத்துடன் அவரை அடித்தவர்களின் வைராக்கியத்தை அவர் பாராட்டினார்!*

அவர்கள் தம்மை எதற்காகக் கொலை செய்ய விரும்பினார்கள் என்பதைக் கூடத் தாம் புரிந்திருந்ததை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் அனுமதித்தார் - ஏனென்றால் கடந்த காலத்தில் கிறிஸ்தவர்களான யூதர்களைப் பற்றி அவர் (பவுல்) அதே வழிமுறையிலேயே உணர்ந்திருந்தார்:

> *நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரண பரியந்தம் துன்பப்படுத்தினேன். அதற்குப் பிரதான ஆசாரியரும், மூப்பர்[10] யாவரும் சாட்சி கொடுப்பார்கள்;[11] அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக் கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படிக்கு, அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவ்விடத்திற்குப் போனேன் (22:4, 5).*

பவுல், அவர்கள் தம்மைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டார். தமஸ்குவுக்கு அவர் பயணம் செல்லுகையில், இயேசுவைப் பின்பற்றுபவராக ஆவதென்பது அவரது சிந்தைக்குத் தூரமாய் இருந்தது - ஆனால் சாலையில் திகைப்படையச் செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர் கர்த்தரைத் தேடிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் கர்த்தர் அவரைத் தேடிக் கொண்டிருந்தார்.

> *அப்படி நான் பிரயாணப்பட்டுத் தமஸ்குவுக்குச் சமீபமான போது, மத்தியான வேளையிலே, சடிதியாய் வானத்திலிருந்து பேரொளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது. நான் தரையிலே விழுந்தேன். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் ஆண்டவரே, நீர் யார் என்றேன். அவர்: நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்.[12] என்னுடனே கூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக் கண்டு, பயமடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை (22:6-9).*

எருசலேமில் இருந்த தமஸ்குவுக்குப் பவுலுடன் சென்றிருந்

*தவர்களில் சிலர் இன்னமும் எருசலேமில் இருந்து, அவரது கூற்றுக்களில் இருந்த உண்மையை ஆராய்ந்திருக்க முடிந் திருக்கும். பவுலிடத்தில் ஏற்பட்டிருந்த மாற்றம் தனிச் சிறப்புடையதாக இருந்தது. அவர் ஒரு தரிசனத்தில் இயேசுவை கண்டிருக்கவில்லையென்றால், அவரது வாழ்வில் ஏற்பட்டி ருந்த திகைப்பூட்டும் மாற்றங்களுக்கு, அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் என்ன விளக்கம் கொடுக்க விருந்தார்கள்?*

*பவுல் தமது எடுத்துரைப்பைத் தொடர்ந்தார்: "அப்பொழுது நான்: 'ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்' என்றேன்" (22:10அ). இது குற்ற உணர்வால் பாரப்பட்டிருந்ததிலிருந்து விடுதலைக்காக எழுப்பிய கதறலாக இருந்தது: "தவறாக வழி நடத்தப்பட்ட எனது வைராக்கியத்தைத் திருத்திக் கொள் வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ஆண்டவரே?" இது அதை விட அதிகமானதாக இருந்தது. பவுலின் வாழ்வில் அந்த நேரம் வரையில் அவர் தாம் யார் என்பதையும், தாம் எங்கு செல்கிறோம் என்பதையும், அங்கு செல்வது எப்படி என்பதை யும் மிகச் சரியாக அறிந்திருந்ததாக நினைத்தார். திடீரென்று அவரது வாழ்வு தலை கீழாகப் புரட்டப்பட்டது. அவருடைய சுய உருவமானது அழிக்கப்பட்டு, அவரது பணித் திட்டமானது புரட்டப்பட்டது. எதிர்காலத்திற்கென்று ஏதாவதொரு திட்டம் அவரிடம் இருந்ததில்லை. இவ்விதமாக அவர், "எனது வாழ்வின் எஞ்சிய பகுதியில் நான் என்ன செய்ய வேண்டும் ஆண்ட வரே?" என்றும் கேட்டார். அந்தக் கேள்வியை நாமும் கேட்காத வரையிலும் இயேசு ஒருபொழுதும் நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.*

*கர்த்தர் பவுலிடத்தில், "நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்" (22:10ஆ) என்று கூறியிருந்தார். சாலையில் அவர் உறுதி செய்யப்பட்டு, தமஸ்குவில் அவர் மனமாற்றம் அடைந்தார். அப்போஸ்தலர் குறிப்பிடத்தக்க அந்த விபரத் தைத் தொடர்ந்தார்:*

> *அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப் போனபடியினால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழி நடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன்.*

*அப்பொழுது வேதப் பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சி பெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன், என்னிடத்தில் வந்து நின்று; சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து, அவனை ஏறிட்டுப் பார்த்தேன். அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத்[13] தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்து கொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு[14] என்றான் (22:11-16).*

பவுல் புறஜாதிகளுக்குப்[15] பிரசங்கித்தார் என்பதே யூதர்கள் அவரை வெறுப்பதற்கு உண்மைக் காரணம் என்று பவுல் அறிந்தார். புறஜாதிகளிடத்திற்குச் செல்வதென்பது தமது கருத்தல்ல - ஆனல் அது கர்த்தருடைய கருத்தாகும் - என்பதை அக்கூட்டத்தார் புரிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினார். அனனியாவின் வார்த்தைகளினால் கர்த்தர் இதைக் குறிப்பால் உணர்த்தினார்: "சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்'' (அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன). இப்பொழுது பவுல் தம்மைக் குறித்த தெய்வீகக் கட்டளையைத் தெளிவாய்ப் பேச முடியும்.

அவர் தமது மனமாற்றத்திற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் தமஸ்குவிலும் அரபு தேசத்திலும் இருந்ததைத் தாண்டி, எருசலேமுக்குத் தாம் வந்த முதல் பிரயாணத்தைப் பற்றிக் கூறினார் (கலா. 1:18; அப். 9:26-30): "பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பி வந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன்" (22:17). தேவாலயத்திற்கு விரோதமாக "எங்கும் எல்லாருக்கும்'' போதித்து வந்தார் என்பதே பவுலின் மீது சுமத்தப்பட்ட மூன்றாவது குற்றச்சாட்டாகும் (21:28). இதற்கு

*மாறாக, அவர் தம் மனமாற்றத்திற்குப் பிறகு, எருசலேமுக்கு முதல் முறை வந்தபோது அவர் தேவாலயத்திற்குத்தான் முதன் முதல் சென்றார். அங்கு ஜெபம் செய்து, கர்த்தரைக் கண்டார். அந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதைப் பாரபட்சமற்ற எந்த ஒரு நபரும் உணர முடியும்.*

*பவுல் தாம் பெற்ற தரிசனத்தைப் பற்றிக் கூறினார்: "அவர் என்னை நோக்கி: 'நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம் பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமை விட்டுப் புறப்பட்டுப் போ' என்றார்" (22:18). சுத்தமான மற்றும் சுத்தமற்ற விலங்கு களைக் கண்டபொழுது பேதுரு வாதம் செய்தது போலவே, பவுலும் கர்த்தரிடத்தில் வாதம் செய்திருந்தார்:*

> *அதற்கு நான்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமா யிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங் களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங் களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந் திருக்கிறார்கள் என்றேன் (22:19, 20).*

*அதாவது அவர், "ஆண்டவரே, நான் செய்ததென்ன என்பதையும், நான் எவ்விதமாய் மாறியிருக்கிறேன் என்பதை யும் காணும் அவர்கள் நிச்சயமாகவே எனது சாட்சியை ஏற்றுக் கொள்வார்கள்" என்று கூறினார்.*

*பவுல் வேறு எங்கும் செல்வதற்குப் பதில், தமது சகயூதர் களுடன் எருசலேமில் தங்கியிருப்பதையே விரும்பியிருந்தார். கர்த்தரோ, அவருடன் (பவுலுடன்) முன்பு இணைந்திருந்த வர்கள் இப்பொழுது அவர் கூறுவதைக் கேட்பதற்குப் பதில், அவரை (பவுலை) காட்டிக் கொடுத்தவர் என்று எண்ணிக் கொலை செய்ய முயற்சி செய்வார்கள் என்பதை அறிந்தி ருந்தார் (9:29). பவுலின் தயக்கத்திற்குக் கர்த்தரின் பதிலானது எந்தவொரு விவாதத்திற்கும் இடமற்று இருந்தது: "நீ போ!" (22:21அ). அதன் பிறகு அவர் பவுலுக்குரிய விசேஷித்த கட்டளையை வலியுறுத்தியிருந்தார்: "நான் உன்னைத் தூர*

மாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" (22:21ஆ).

"புறஜாதியார்" என்ற வார்த்தையைப் பவுல் முடிந்த அளவுக் குத் தூரமாகவே தம் எடுத்துரைப்பில் வைத்திருந்தார். அநேக மாய் அவர் தாம் புறஜாதியார் மத்தியில் செய்திருந்த ஊழியத் தைத் தேவன் எவ்விதமாய் ஆசீர்வதித்திருந்தார் என்று கூறத் திட்டமிட்டிருந்திருப்பார். உயிர்த்தெழுந்த கர்த்தரை விசுவாசிக்கும்படி அவர் தம் உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்களிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு அவர் விரும்பி யிருப்பார் என்பதும் உறுதியாகும். அவர் ஒருபொழுதும், அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. பவுல் "புறஜாதியார்" என்று சொன்ன பொழுது, கூட்டம் கொதித்தெழுந்தது. "இந்த வார்த்தை வரைக்கும் அவனுக்குச் செவி கொடுத்தார்கள். பின்பு: இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து அகற்ற வேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள்" (22:22). மூல மொழியில், "மற்றும் அவர்கள் இந்த வார்த்தை [புறஜாதியார்] வரைக்கும் அவனுக்குச் செவி கொடுத்தார்கள்" என்றுள்ளது.

"இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத்[16] தங்கள் மேல் வஸ்திரங்களை எறிந்து விட்டு, ஆகாயத்திலே புழுதியைத் தூற்றிக் கொண்டிருக்கையில்,'' (22:23) என்று லூக்கா குறிப்பிட்டார். அவர்களது செயல்களின் துல்லியமான தனிச் சிறப்புள்ள தன்மை என்ன என்று நாம் அறியவில்லை. ஒரு வேளை அவர்கள் பவுலைக் கல்லெறியத் தயார் செய்து கொள் வதற்குத் தங்கள் மேல் வஸ்திரங்களை அகற்றியிருக்கலாம் (22:20ஐக் கவனிக்கவும்), ஆனால் அவர்கள் எறியும்படிக்கு அவர்களுக்குப் புழுதிதான் அகப்பட்டது (2 சாமு. 16:13ஐக் கவனிக்கவும்). ஒரு வேளை அவர்கள், "வெறி பிடித்த விலங்கு கள் போலத் தங்கள் கோபத்தை வெளிக் காட்டியிருக்கலாம்"[17] கோபமடைந்த எருது தன் பாதத்தினால் பூமியைச் சுரண்டிப் புழுதியைக் கிளப்புவது போல அவர்கள் செய்திருக்கலாம்.[18] அவர்கள் "புறஜாதியார்" என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில், கட்டுக் கடங்காத வெறி கொண்டனர் என்பதை மட்டும் நாம் அறிகின்றோம்.

ஒவ்வொரு ஊழியக்காரருமே பவுலைப் போன்ற இவ்வித அனுபவத்தைப் பெற்றுள்ளனர். அவரது பிரசங்கம் நன்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்; தம் உரையைக் கவனிப்பவர்

களின் முகத்தோற்றத்திலிருந்து அவர் தம் பிரசங்கத்தைப் பாராட்டுவதை அவர் கூற முடியும். பிறகு அவர் - ஒருவேளை அபாயமற்றது என்று தாம் கருதுகின்ற - ஒரு வார்த்தை அல்லது ஒரு கூற்றைப் பேசுவார். உடனே திடீரென்று அவர்களின் முகம் கறுத்துச் சிறுத்து விடும். அவர்கள் மட்டும் நாகரீகமற்ற வர்களாகவோ - அல்லது சட்ட விரோதமான செயலாக இல்லாதிருந்தாலோ - அவர்களில் சிலர் அவரை இழுத்துச் சென்று கல்லெறிந்திருப்பார்கள்.

கேட்பவர்களுக்கு இவ்விடத்தில் ஒரு பாடம் உள்ளது. "புறஜாதி" என்ற வார்த்தை பவுலின் உரையைக் கேட்டவர் களுக்கு வெறுப்புக்குரிய ஒரு வார்த்தையாக இருந்தது. நமது உணர்வைத் தொடக்கூடிய ஒரு வார்த்தை, நம்மால் சகிக்கக் கூடாத ஒரு சொற்றொடர், நம்மை சங்கடத்துக்குள்ளாக்கும் (அல்லது கோபப்படுத்தும்) வேதாகம பாடத் தலைப்பு எதுவும் உள்ளதா? "புறஜாதி" என்ற வார்த்தைக்கு யூதர்கள் அளித்த பதில்செயல் மூலம் அவர்கள் தங்கள் இருதயங்களின் தப்பெண்ணத்தையும், சகிப்பில்லாத்தன்மையும் வெளிக் காட்டினார்கள். நம்மை கலக்கப்படுத்துகின்ற வார்த்தைகளும் கருத்துக்களும் நமது இருதயங்களைப் பற்றி நாம் உணர்வதைக் காட்டிலும் அதிகம் கூறலாம்.

பிரசங்கியார்களுக்கும் இவ்விடத்தில் பாடங்கள் இருக்கின் றன. கூட்டத்தாருக்குப் பவுலின் பிரசங்கத்தை நான் வாசிக்கை யில், அவர் எந்த அளவு தம் உரையைக் கேட்பவர்களின் மனதைப் புண்படுத்தாமல் பேசினார் என்பதைக் கண்டு என் மனதில் மதிப்புணர்வு உண்டாகின்றது. அவர் தமது உரை முழுவதிலும் யூதர்களின் சொற்களையே பயன்படுத்தினார். கர்த்தர் தம்மை சுயமாய் அடையாளம் காட்டியதைக் கூறும் பொழுது தவிர மற்ற இடங்களில் அவர் ஒருபொழுதும் "இயேசு" என்ற பெயரை பயன்படுத்தவேயில்லை. அனனியா ஒரு கிறிஸ்தவர் என்பதையோ அல்லது தேவாலயத்தில் அவருக்குத் தரிசனமான "கர்த்தர்" என்பவர் இயேசுவே என்பதையோ அவர் குறிப்பிடவில்லை. பிறகு ஏன் அவர் அவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடிய "புறஜாதிகள்" என்ற வார்த்தையை மட்டும் தெளிவாகப் பயன்படுத்தினார்? ஏனென்றால் புண்படுத்துதலைத் தவிர்த்தலுக்கும் சமாதானம் ஏற்படுத்துவதற்கும் இடையில் வேறுபாடு ஒன்றுள்ளது. யூதர்

*களுக்குக் கோபமுண்டாக்குவதைப் பவுல் தம்மால் முடிந்த அளவு தவிர்த்தார், ஆனால் அவர்களைச் சமாதானப்படுத்துவது அவர் வேலையல்ல. கர்த்தர், "நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" என்று கூறியிருந்தார், எனவே அதையே பவுல் அறிக்கையிட்டார். நீங்கள் போதிக்கும் பொழுது, உங்கள் மாணவர்கள் முரண்பட்டு விடாதபடிக்கு ஓரளவுதான் நீங்கள் முயற்சி செய்ய முடியும். மனிதர்களைச் சந்தோஷப்படுத்துகின்றவர்கள் புண்படுத்தும் ஒரு "வார்த்தை"யை என்ன விலை கொடுத்தும் தவிர்த்து விடுவார்கள்; இருப்பினும், அந்த "வார்த்தை" தேவனுடைய வார்த்தையாய் இருந்தால், தேவனைப் பிரியப்படுத்துகின்றவர்கள், என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும், சத்தியத்தையே போதிப்பார்கள் (கலா. 1:10).*

***ரோமர்களுக்கு முன்பாக அவரது தற்காப்புவாதம் (22:24-29)***

*பவுலின் பேச்சிலிருந்து கலகத்தின் காரணத்தைக் கண்டு பிடிக்கலாம் என்று ரோம அதிகாரி நம்பிக்கையுடன் இருந் திருந்தால், அவர் ஏமாற்றம் அடைந்தார். அநேகமாக அவர் அரமாயிக் மொழியைப் புரிந்து கொள்ளாதிருந்திருப்பார், அப்படியே அவர் புரிந்து கொண்டிருந்தாலும், "புறஜாதி" என்ற வார்த்தை ஏன் அவ்வளவு வன்முறையான பதில்செயலைத் தூண்டியது என்று ஆச்சரியப்பட்டிருப்பார். பவுலின் தற்காப்பு வாதத் தொடக்கத்தில் இருந்தது போலவே அதன் முடிவிலும் கூட அவர் [சேனாதிபதி] புரியாமையிருளில்தான் இருந்தார்.*

*ஏமாற்றமடைந்த "சேனாதிபதி அவனைக் கோட்டைக் குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு" (வ. 24அ) அக்கும்பலை அமைதிப்படுத்துவதற்காக முயற்சி செய்தார். பிறகு அவர், "அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு அவனைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான்" (வ. 24ஆ). ரோமானியர்களின் முறையான செயல்பாடு இதுவேயாகும். குற்றவாளி ஒருவன் அடிக்கப்படாவிட்டால் உண்மை கூறமாட்டான் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.*

*சிலுவையில் அறையப்படுதல் தவிர, சவுக்கால் அடிப்பது என்பது ரோமர்களால் கைக்கொள்ளப்பட்ட மிகவும் கொடூர மான தண்டனை முறைமையாகும். தடித்த ஒரு மரக் கைப்பிடி*

யில் நான்கு அல்லது ஐந்து தோல் வார்கள் இணைக்கப் பட்டிருக்கும். அந்தத் தோல் வார்களில் எலும்பு மற்றும் உலோகத்துண்டுகள் பதிக்கப்பட்டிருக்கும். வைராக்கியமான தண்டிப்பவர் ஒருவர் அதைக் கொண்டு அடிக்கையில் ஒவ்வொரு அடியிலும் சதைகளும் எலும்புகளும் வெளிக் கொண்டு வரப்படும். இவ்விதமாய்ப் "பரிசோதனை" செய்யப் பட்ட பலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஊனமடைந்திருக் கின்றார்கள்; சிலர் இறந்துள்ளார்கள்; வெகு சிலரே அதற்குப் பிறகு சரியான மனநிலையுடன் இருந்துள்ளார்கள். பவுல் இவ்விதமாய்ப் பலமுறை அடிக்கப்பட்டிருந்தார் (2 கொரி. 11:24, 25), ஆனால் அவர் ரோமர்களால் இவ்விதம் ஒரு பொழுதும் அடிக்கப்பட்டிருந்ததில்லை.

சேனாதிபதி துன்புறுத்தும் அறைக்குள் தண்டிக்கும் குழுவு டன் நுழையவில்லை; ஒருவேளை சகிக்க முடியாத அதைப் பார்க்க அவருக்கு தைரியம் இல்லாது இருந்திருக்கலாம். அநேகமாக அந்த அறையில் தான் பிலாத்துவின் கட்டளைப்படி இயேசு அடிக்கப்பட்டிருந்திருப்பார் (யோவான் 19:1; மத். 27:26; மாற். 15:15). பவுலின் உடைகள் அவரின் உடலில் இருந்து உரியப்பட்டன; பிறகு அவர் அடிக்கப்படும் தூணில் கட்டப்பட்டார்.[19] தண்டிப்பவர் அடிப்பதற்குச் சவுக்கைத் தயார் செய்து கொண்டிருக்கையில், அப்போஸ்தலர் அங்கிருந்த பொறுப்பு அதிகாரியிடம் பேசினார்: "அந்தப்படி அவர்கள் அவனை வாரினால் அழுந்தக் கட்டும்போது,[20] பவுல் சமீபமாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி: ரோமனும் நியாயம் விசாரிக்கப்படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான்" (வ. 25).

பவுலின் எளிய கேள்வியானது துன்பப்படுத்துபவர்களைத் துன்பப்படுத்தியது. ரோமக்குடிமகனை கட்டுதலும் அடித்தலும் சட்ட விரோதமாய் இருந்தது; அவர் அதை அறிந்திருந்தார். அவர்களும் அதை அறிந்திருந்தார்கள். பவுல் உண்மையிலேயே ரோமக்குடி மகனாய் இருந்து, அவரை அவர்கள் அடித்தால், அவர்கள் பதவி பறிபோகும், ஒருவேளை அவர்கள் கொல்லப் படவும் கூடும். நூற்றுக்கதிபதி நேரத்தை வீணாக்காமல், சேனா திபதியைச் சந்தித்தார்: "... சேனாதிபதியினிடத்திற்குப் போய், அதை அறிவித்து: 'நீர் செய்யப் போகிறதைக் குறித்து எச்சரிக்கை யாயிரும்; இந்த மனுஷன் ரோமன்' என்றான்" (வ. 26).

எச்சரிக்கையடைந்த “சேனாதிபதி பவுலினிடத்தில் வந்து: ‘நீ ரோமானா? எனக்குச் சொல்’ என்றான். அதற்கு அவன்: ‘நான் ரோமன்தான்’ என்றான்” (வ. 27). பவுலின் பதிலானது நம்பு வதற்குக் கடினமாயிருந்தது. குள்ளமான, வழுக்கைத் தலையாய் இருந்த[21] அந்த யூதர் அதிக வசீகரத்துடன் தோற்றமளிக்க வில்லை (2 கொரி. 10:10). அடிக்கப்பட நின்றிருந்த நிலையில் இப்போது அவரது உடலில் பழைய தழும்புகள் நிறைந் திருந்தன (கலா. 6:17) மற்றும் புதிய பிளவுகளும் காயங்களும் இருந்தன. அவர் தூய்மையான ரோமக் குடிமகனாக அல்ல, மூன்றாம் முறை குற்றம் செய்து பிடிபட்டவர் (three-time loser[22]) போலவே காணப்பட்டார். அந்த அதிகாரி, “நான் மிகுந்த திரவியத்தினாலே இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன்” (வ. 28அ) என்று பதில் அளிக்கையில் அதில் இருந்த நம்பிக்கை யின்மையை என்னால் கேட்க முடிகின்றது. “நாடோடியாகத் திரியும் ஒரு யூதனுக்கு எப்படி இவ்வளவு ரொக்கம் கிடைத் திருக்கும்?” என்று அவர் எண்ணியிருக்கலாம். பவுல், “நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான்” (வ. 28ஆ).[23]

பவுல் தர்சு நகரில் பிறந்ததால் அவர் ரோமக் குடிமகனாகி விடவில்லை; தர்சு என்பது ஒரு சுதந்திரமான நகரமாய் இருந்தது, ஆனால் அது ரோமர்களின் குடியேற்ற நகரமாய் இருந்ததில்லை. ஆகையால், அவரது தகப்பனாரோ அல்லது தாத்தாவோ ரோமக்குடிமகனாய் இருந்திருக்க வேண்டும். அந்தக் குடியுரிமை எவ்விதமாய்ப் பெறப்பட்டது என்று நாம் அறியவில்லை. பவுலின் முன்னோர்களில் ஒருவர் ரோம அரசுக்குச் சிறப்பான சேவை செய்திருக்கலாம் என்று யூகிக்கப் படுகின்றது.[24] தர்சுவுடன் பிணைப்புப் பெற்றிருந்த பாம்ப்பே அல்லது மாற்கு அந்தோனி ஆகியோருக்கு இச்சேவை செய்யப் பட்டிருக்கலாம்.

பவுலின் குரலில் அல்லது போக்கில் இருந்த ஏதோவொன்று அதைக் கேட்டவர்களின் ஐயத்தைப் போக்கியது: அவர் தமது உரிமை கோருதலின்படியானவராகவே இருந்தார்! “அவனை அடித்து விசாரிக்கும்படி எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டு விட்டார்கள்” (வ. 29அ). அவர்கள் அவரைக் கட்டவிழ்ப்பதற்குத் தட்டுத்தடுமாறி, தோல் வார்களை நடுங்கும் விரல்களால் அவிழ்த்ததை என்னால் காண முடிகின்

றது. J.W. மெக்கார்வி அவர்கள் இதை ஏற்ற விதத்தில் ஆராய்ந் துள்ளார்: “தொலை தூர மாகாணமொன்றில், சிறைச்சாலை யின் சுவர்களுக்குள், ‘நான் ஒரு ரோமக்குடிமகன்’ என்று கூறிய எளியதொரு அறிவிப்பானது துன்புறுத்த உயர்த்தப்பட்ட கருவிகளைக் கீழே தாழ்த்தியதிலிருந்து சட்டத்தின் கம்பீரத்தை நாம் கண்டுணர்ந்து பாராட்டக் கூடும்.”

சேனாதிபதியும் கூட, “அவன் ரோமனென்று அறிந்து, அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான்”[25] (வ. 29ஆ). அடித்தல் நடந்திருந்தால் அவர் (சேனாதிபதி) தமது ரோமக் குடியுரிமையை இழந்திருப்பதோடு அதை விட மிக அதிகமான விலையையும் - தனது உயிரையும் கூட - கொடுக்க வேண்டிய தாயிருக்கும். அந்தத் துன்பம் நடக்காதபடி அவர் தடுத்து விட்டார் என்பதில் ஐயமில்லை - ஆனால் அவர் மிகவும் கலக்க மடைய வேண்டியதாயிற்று. தீங்கற்ற இந்த யூதர்/ரோமர் ஏன் இவ்வளவு வெறுப்புணர்வை எழுப்பினார்?

நமது அடுத்த பாடத்தில், “உண்மையைக் கண்டு பிடிக்க” சேனாதிபதி தொடர்ந்து செய்த முயற்சிகளை நாம் காண் போம். இப்பொழுது சற்று நேரம், நாம் படித்தவைகளில் இருந்து என்ன கற்றுக்கொள்ள முடியும் என்று நாம் காண்போம்.

## நமது மன்னிப்புக் கேட்டல்

வேதாகமத்தில் உள்ள "apology" (மன்னிப்புக் கேட்டல்) என்ற வார்த்தைக்கும், இன்றைய நாட்களில் நாம் “apologizing” (மன்னிப்புக் கேட்டல்) என்று அழைக்கும் செயலுக்கு சிறிதும் தொடர்பில்லை என்பதை நினைவில் வையுங்கள். கிறிஸ்தவர் கள் என்று தங்களை உரிமை கோரிக் கொள்பவர்களில் பலர் தங்களின் விசுவாசத்தைப் பற்றி வெட்கமடைந்து - தங்கள் உறுதிப்பாட்டிற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நினைக்கின்றார்கள். வேதாகம ரீதியான apology என்பது தவறை ஒப்புக் கொள்ளுவதல்ல ஆனால் சரியானவைகளுக்காக வாதிடுவதாகும். நமது வேத பாடப் பகுதியிலிருந்து, “உங்களி லிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் ... உத்தரவு சொல்ல” (1 பேது. 3:15ஆ) உதவி செய்யும் சில பாடங்களை நான் எடுத்துரைக்கின்றேன்:

*1. தயாராயிருங்கள்.* விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, பவுலைப் போலவே நீங்களும் உங்கள் விசுவாசத்தைத் தற்காத்துக் கொள்ள அழைக்கப்படுவீர்கள் - எனவே தாமதமாக அல்ல விரைவாகவே உங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

*2. நற்பண்புடையவராயிருங்கள்.* பவுல் இங்கு கைது செய்யப்படுவதற்குச் சற்று முன்பு, "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள் ... நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:17-21) என்று எழுதியிருந்தார். அவர் அதை எழுதியிருந்தார், ஆனால் அவர் அதன்படி வாழ முடிந்திருந்ததா? அவரது இரத்தத்திற்காகக் கூக்குரலிட்ட யூதக் கும்பலுடனும், அவரது சரீரத்தைக் கிழிக்கத் தயாராயிருந்த உணர்வற்ற ரோமச் சேவகருடனும் அவர் மிகக் கடுமையாகச் சோதிக்கப்பட்டார்! அந்தச் சோதனையை அவர் அமைதியுடனும் நற்பண்புடனும் எதிர் கொண்டார். உங்கள் விசுவாசத்திற்கு அறைகூவல் விடுப்பவர்கள் அகமகிழ்வில்லாதிருக்கலாம், ஆனால் நீங்கள் அவ்வாறு இருக்கக் கூடாது.

*3. சுயமானவராயிருங்கள்.* வேதாகமத்தைப் பற்றி அறிய வேண்டிய யாவற்றையும் அறியாதவராகவோ, அல்லது கேட்கப்படும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் கூற முடியாதவர்களாகவோ நீங்கள் இருக்கலாம், ஆனால் நீங்கள் எவ்விதம் கிறிஸ்தவரானீர்கள் என்று உங்களால் கூற முடியும். "இயேசு உங்களுக்கு என்ன செய்தார் என்பதைக் கூறும் மாபெரும் அதிகாரத்தை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்!"[26] பவுலின் செய்தியானது அவரது மனமாற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஒப்புவித்தலாகவே இருந்தது. நீங்கள் வேதாகமத்தைப் பற்றி இன்னும் அதிகமாய் அறிந்து, உங்கள் விசுவாசத்தைத் தற்காத்துக் கொள்ளத் தொடர்ந்து விரும்புவீர்கள், ஆனால் எப்பொழுதும் உங்கள் செய்தியானது உங்கள் தனிப்பட்ட அனுபவத்திற்குரியதாகவே இருக்கட்டும்.

*4. கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருங்கள்.* பவுல் தமது மனமாற்றத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தாலும், அவரது நோக்கமெல்லாம் தம்மீது அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றிராமல், கிறிஸ்துவினிடத்தில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகவே இருந்தது. அவரது உரையைக் கேட்பவர்களுக்கு, "நசரேயனாகிய இயேசு" என்ற பெயரானது

சிலுவையில் அறையப்பட்டிருந்த ஒருவரையே நினைவூட்டி யது, சாலையில் தாம் பெற்ற தரிசனத்தைப் பற்றிய பவுலின் எடுத்துரைப்பானது, அதே இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பதை அவர்களுக்கு அறிவித்தது. நாம் மக்களை நம்மை நோக்கியல்ல, இயேசுவை நோக்கியே மனமாற்றமடையச் செய்ய வேண்டும்.

*5. இணக்கமுள்ளவராயிருங்கள்.* பவுலின் அடிப்படைச் செய்தியானது எப்பொழுதும் ஒன்று போலவே இருந்தது, ஆனால் இந்த வேளையில் அவரது அணுகுமுறையானது ஜெப ஆலயங்களில் அவர் மேற்கொண்ட அணுகுமுறையிலிருந்து மாறுபட்டிருந்தது. உங்களுக்கு அறைகூவல் விடுப்பவர்களைப் பற்றி நன்கறிந்து, அதற்கேற்றாற்போல் உங்கள் தற்காப்பு வாதத்தைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.

*6. அறைகூவல் விடுப்பவராயிருங்கள்.* இயேசு செய்திருந் ததைக் கூறிய பிறகு பவுல், மனிதர் என்ன செய்ய வேண்டும் என்று கூறினார். இயேசு மேசியாவாக இருந்தால், ஒவ்வொரு மனிதரும் அவர் [பவுல்] செய்ததைப் போன்றே செயல்பட வேண்டும்: ஒவ்வொருவரும், “எழுந்து கர்த்தருடைய நாமத் தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று [அவரது] பாவங்கள் போகக் கழுவப்பட” வேண்டும் (வ. 16ஆ). பிறகு ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். உங்கள் விசுவாசத்தை நீங்கள் தற்காக்கை யில், விவாதங்களில் வெல்லுவதல்ல, ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதே உங்கள் நோக்கமாயிருக்க வேண்டும். நீங்கள் மேற்கொண்ட அதே ஒப்புக்கொடுத்தலைக் கூடியுள்ள அனைவரும் மேற்கொள்ளும்படி அறை கூவல் விடுங்கள்.

*7. சீரானவராயிருங்கள்.* உங்கள் வார்த்தைகளுடன் உங்கள் வாழ்க்கை சீரானதாயிருந்தால் மட்டுமே உங்கள் தற்காப்பு வாதமானது ஏற்றுக் கொள்ளப்படும். பவுல் தமது விசுவாசத் திற்காக இறக்கவும் தயாராயிருந்தார்; உங்கள் விசுவாசத்திற்காக நீங்கள் வாழத் தயாராயிருப்பதை மக்கள் காண முடியுமா?

*8. உணர்வுள்ளவராயிருங்கள்.* நமது விசுவாசத்திற்காக நாம் துன்பப்படத் தயாராயிருந்தாலும் கூட, நமது பொது அறிவை யும் நாம் பயன்படுத்த வேண்டும். பவுல் தமது உபத்திரவம் கிறிஸ்துவின் நிமித்தமாயில்லாதபோது, உபத்திரவப்பட விரும்பவில்லை. அவர், ரோமக்குடிமகன் என்ற முறையில்

*தமது உரிமைகளை வலியுறுத்தத் தயங்கவில்லை. அவிசுவாசிகளிடமிருந்து அற்பமான திட்டுகளை நீங்கள் பெற்றுக் கொள்வது அவசியமில்லை. நற்பண்புடன் இருங்கள், ஆனால் அவர்களை விட்டுக் கடந்து சென்று விடுங்கள்.*

*9. தொடர்ந்து முயற்சி செய்பவராயிருங்கள். உங்களால் முடிந்த அளவு சிறந்த முறையில் செயல்பட்ட பிறகு, உங்கள் விசுவாசத்திற்கு அறைகூவல் விட்டவர்களை ஏற்றுக் கொள்ள வைக்க முடியாமற் போனால், நம்பிக்கையிழந்து விடாதீர்கள். பவுல் அந்தக் கும்பலை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவில்லை. அடுத்த நான்கு அதிகாரங்களில் பவுலின் மூன்று பிரசங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு தனிப்பட்ட பாடமும் உள்ளது. இந்தப் பதிவுகளின்படி, ஒரு தனிநபர் கூட மனமாற்றப்படவில்லை; ஆனால் அந்த அப்போஸ்தலர் தேவன் விரும்பியதைச் செய்தார். நீங்கள் உங்கள் விசுவாசத்தைத் தொடர்ந்து பகிர்ந்து கொண்டிருந்தால், ''விளைவை''க் கண்டாலும் காணாவிட்டாலும், - நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அதைச் செய்து கொண்டிருப்பீர்கள். ஒருபோதும், ஒருபோதும் விட்டு விடாதீர்கள்.*

## முடிவுரை

*இதை நாம் முடிக்கையில், பவுல் தமது மனமாற்றம் பற்றிக் கூறியவற்றிற்கு நாம் மறுபடியும் திரும்புவோம். அவரது பிரசங்கத்தில், மனமாற்றம் மற்றும் ஒப்புக் கொடுத்தல் பற்றிய பல பாடங்கள் இருக்கின்றன. கர்த்தரைப் பொறுத்தமட்டில் - நம்பிக்கை சிறிதுமற்றவர்கள் என்று எவருமில்லை என்பது அப்பாடங்களிலேயே மனவெழுச்சி அதிகமூட்டும் ஒரு பாடமாகும்! அவரால் பவுலை இரட்சித்து, அவரின் வாழ்க்கையைத் திருப்ப முடிந்ததென்றால், அதையே அவர் உங்களிடத்தில் செய்ய முடியும்! இயேசுவின் இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் போகக் கழுவப்படும்படியாக நீங்கள் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா (வ. 16)? பவுலைப் போல நீங்கள் உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுத்திருக்கின்றீர்களா? தேவாலயத்தில் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அவரது செய்தியினால்*

*தொடப்பட முடியாத அளவுக்கு இருதய கடினமுள்ளவர்களாயிருந்தார்கள், ஆனால் உங்கள் இருதயம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன். கீழ்ப்படிய இப்போதே சமயம்.*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*அந்தோனியோ கோட்டையின் படிகளின் மேல் பவுல் செய்த பிரசங்கமானது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படலாம்: (1) அவரது முந்திய நடக்கை (வ. 3-5); (2) அவரது எழுச்சியான மனமாற்றம் (வ. 6-13, 16); (3) அவர் பெற்ற சரியான கட்டளை (வ. 14, 15, 17-21). (நான் இந்த அணுகுமுறையைப் பல ஆதாரங்களில் இருந்து தழுவியமைத்துள்ளேன்.)*

*குறிப்புகள்*

[1]*Apologia என்பது* apo (“from”) *என்ற வார்த்தையை logos* (“word” or “reason”) *என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையாகும்.* [2]*கிறிஸ்தவ விசுவாசத்தை ஆதரிக்கும் விவாதங்கள் பற்றிய படிப்பானது* “Apologetics” *என்று அழைக்கப்படுகின்றது.* [3]*இவ்வார்த்தையானது, 22:1; 24:10; 25:8, 16; 26:1, 2, 24ல் காணப்படுகின்றது. 19:33ல் இது எட்டாவது முறையாக உள்ளது, அங்கு எபேசுவின் அரங்க சாலையில் அலெக்சந்தர் என்ற பெயருடைய யூதர் ஒருவர் உத்தரவு சொல்ல மனதாயிருந்தார்.* [4]*நடபடிகளின் கடைசி கால் பாகம் முழுவதிலும், பவுல் ரோமச் சட்டங்கள் எதையும் மீறிய குற்றம் செய்திருந்ததில்லை என்பதை மறுபடி மறுபடி காட்டும் வகையில் லூக்கா சட்ட ரீதியான தற்காப்பு வாதத்தைக் கொடுத்தார் என்று கருத்துக் கூறப்படுகின்றது.* [5]*அப்போஸ்தலர் எருசலேமுக்கு வந்த நோக்கங்களில் ஒன்று, “தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்திற்கு மாண்புடன் சாட்சி கூறுவது” (20:24ஆ) ஆகும்; இது அவருக்குக் கிடைத்த முதல் வாய்ப்பாக இருந்திருக்கும்.* [6]*அரமாயிக் என்பது எபிரெய மொழியின் வட்டார மொழியாகும்.* [7]*பவுலின் தொடக்க வார்த்தைகளை 7:2ல் உள்ள ஸ்தேவானின் தொடக்க வார்த்தைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஸ்தேவான், “சகோதரரே, பிதாக்களே” என்று கூறியபோது சனதெரீன் சங்கத்து உறுப்பினர்களைக் குறிப்பிட்டிருந்ததால், அதிகாரம் 21ல் காணப்படும் கொலைகாரக் கும்பலில் சனதெரீன் சங்கத்து உறுப்பினர்கள் இருந்தார்களோ என்று சிலர் வியப்படையகின்றார்கள். அது சாத்தியமே;*

அநேகமாய் அப்படியிருந்திருக்கக் கூடும். பவுல் "பிதாக்களே" என்று குறிப்பிட்டது கூட்டத்தில் இருந்த வயதான மனிதர்களை நோக்கிக் கூறப்பட்டதாய் இருந்திருக்கலாம். [8]இது கிறிஸ்தவ சகோதரர்களைக் குறிப்பதல்ல, மாறாக அவரது சக யூதர்களைக் குறிப்பதாகும். [9]ரோமப் பேரரசின் பெரும்பான்மையான பகுதிகளில் இருந்த ஜெப ஆலயங்களில் பவுல் யூதர்களை எதிர்கொண்டபோது, அவர், "வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, ... நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப் படுத்திக் கொண்டிருந்தார்" (17:2, 3). எருசலேமிலும் அவர் அப்படியே செய்திருப்பா ரென்று நாம் வாசிக்கலாம் என்று எதிர்பார்க்கக் கூடும், ஆனால் சூழ்நிலை மாறுபட்டதாக இருந்தது. இந்த மக்கள் அவரது இரத்தத்திற்காகக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள்; அவர் இயேசுவைப் பற்றிக் கூறுவதை அவர்கள் கவனிப்பதற்கு முன்பு, அவர் அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டியதாயிருந்தது. [10]"மூப்பர் யாவரும்" என்பது சனதெரீன் சங்கத்தாரைக் குறிப்பிடும் ஒரு வழி முறையாகும். "மூப்பர்கள்" என்பது சபையின் மூப்பர்களையல்ல, ஆனால் யூதத் தலைவர்களில் வயது முதிர்ந்தவர்களைக் குறிப்பிடுவதாகும். "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் உள்ள சொற்பொருள் அகராதியில் "Sanhedrin", "சனதெரீன்" என்ற வார்த்தையின் கீழ் காணவும்.

[11]பவுல், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த காலத்தில் காய்பா என்பவர் பிரதான ஆசாரியராக இருந்தார் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் அப். 4:6க்கான குறிப்புகளைக் காணவும்). அந்தோனியா கோட்டையின் படிகளின் மீது பவுல் பேசியபோது, அனனியா என்பவர் பிரதான ஆசாரியராக இருந்தார் (23:2). இருப்பினும் காய்பா அப்பொழுது உயிருடன் இருந்திருக்க வாய்ப்புண்டு. அப்பொழுது சனதெரீன் சங்கத்தில் இருந்த சில உறுப்பினர்களும் - ஒருவேளை பிரதான ஆசாரியரும் கூட - பவுலைத் தமஸ்குவுக்கு செல்லும்படி அனுமதித்திருந்த குழுவின் பாகமாய் இருந்திருக்கவும் வாய்ப்புண்டு. இதற்கு எதிரிடையாக பவுல் தாம் கூறியது சனதெரீன் சங்கத்தின் பதிவேடுகளால் உறுதிப்படுத்தப்பட முடியும் என்று எளிய ஆலோசனை கொடுத்தார். [12]பவுல் "உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை, ஆனால் கேட்டவர் களில் பலர் இயேசு மரித்திருக்கவில்லை என்றும் இவ்விதமாக அவர் உயிர்த்தெழுப் பப்பட்டார் என்றும் பவுல் கூறுகின்றார் என்று புரிந்து கொண்டிருப்பார்கள். இயேசுவின் உடல் களவாடப்பட்டிருந்தது (மத். 28:11-15) என்பதே எருசலேமின் அதிகாரப் பூர்வமான செய்தியாய் இருந்தது. பவுலின் விபரமானது அந்தக் கதை பொய்யென்று காண்பித்தது - ஒருவரும் அதை மறுத்துப் பேசவில்லை. [13]"நீதிபரர்" என்பது மேசியாவுக்கான ஒரு சொற்றொடராய் இருந்தது (அப். 3:14; 7:52; ஏசாயா 53:11ஐக் கவனிக்கவும்). [14]ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிய பவுல் தயங்கவில்லை (9:18). [15]குறிப்பாக, புறஜாதியார் யூதமார்க்கத் தமைந்தவராய் ஆகாமலேயே இரட்சிக்கப்பட முடியும் என்று அவர் பிரசங்கித்ததால் வெறுக்கப்பட்டார். [16]ஒருவேளை அவர்கள் "அவனை அகற்று! அவனை அகற்று!" என்று கோஷமிடத் தொடங்கியிருக்கலாம். [17]J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles*, vol. 2 (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 220. [18]பவுல் தம்மை எதிர்த்து நின்றவர்களைப் புறக்கணித்ததின் அடையாளமாக தமது வஸ்திரங்களை உதறியது போல் இவர்களின் செயல்பாடும் இருந்திருக்கலாம் என்று கருத்துக் கூறப்படுகின்றது (18:6; 13:51ஐக் காணவும்). [19]பெரும்பாலும் கைகளும் கால்களும் தூணில் கட்டப்படும். அப்படி நடந்திருந்தால் அது அகபுவின் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேற்றமாகும் (21:11). [20]இது, அவர்கள் அவரை தோல் வார்களில் கட்டி உயர ஏற்றினார்கள் என்றும் அர்த்தப்பட முடியும், ஆனால்

*அடிக்கும் தூணின் மீது பரப்பி வைப்பதே பொதுவான செயல் முறையாக இருந்தது.*

[21]*பவுல் மற்றும் தெல்கா ஆகியோரின் நடபடிகள் என்ற தள்ளுபடி ஆகமத்தின் படி, பவுல் "வழுக்கைத் தலையுடன், வளைந்த கால்களுடன், உறுதியான உடல் கட்டுடனும், உருவத்தில் ஒரு சிறு மனிதராகவும், இணைந்த புருவங்களுடனும், மிக நீளமான மூக்குடனும் இருந்தார்."* W. M. *ராம்சே அவர்களின் கூற்றுப்படி, "அப்போஸ்தலரின் சரீரத் தோற்றம் பற்றிய தெளிவான, போலிப் புகழ்ச்சியற்ற இந்த விபரமானது மித முந்திய பாரம்பரியத்தில் ஊன்றியதாகும்."* (Quoted in A.T. Robertson, "Paul, the Apostle," *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960], 4:2277.) [22]"Three-time loser" *என்பது மூன்றாம் முறையாகப் பெரும் குற்றம் செய்து பிடிப்பட்ட ஒருவரைக் குறிக்கும் அமெரிக்கச் சொற்றொடர் ஆகும். மூன்றாம் முறை குற்றம் சாட்டப்படுதலானது மிகக் கடுமையான தண்டனைகளைக் கொண்டு வரும்.* [23]*நடபடிகளில் பவுல் தமது ரோமக் குடியுரிமையை வலியுறுத்துவது இது இரண்டாவது முறையாகும் (முதல் முறைக்கு 16:37ஐக் காணவும்). மூன்றாவது நிகழ்ச்சியொன்றை நாம் 25:11ல் காண்போம். பவுல் இதைச் செய்த ஒவ்வொரு முறையும் அவர் தம் தனிப்பட்ட பிரயோஜனத்திற்காகவன்றி, கிறிஸ்துவினிமித்தமே அப்படி செய்தார் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் உள்ள குறிப்புகளைக் காணவும்). அப். 22ல் தமக்கு மரணம் நேர்ந்தால் கர்த்தரின் நோக்கம் பாதிக்கப்படும் என்பதால் பவுல் தமது குடியுரிமையை அறிவித்தார். பவுல் உயிருக்குப் பயந்தவரல்ல; அவரிடத்தில் "மரணபயம்" என்று எதுவும் இல்லை. கர்த்தருக்குச் சித்தமானால் அவர் மரணமடையத் தயாராய் இருந்தார் (அப். 21:13; பிலி. 1:21, 23) ஆனால் தேவையின்றித் தமது வாழ்வைத் தூர எறிய அவரிடத்தில் விருப்பம் இருந்ததில்லை.* [24]*இவர்களில் ஒருவர் இலஞ்சம் கொடுத்துக் குடியுரிமை பெற்றிருப்பார் என்பதே இதற்கு மாற்றுக் கருத்து ஆகும், ஆனால் கண்டிப்பான பரிசேயர் இவ்விதம் செய்திருக்க மாட்டார்.* [25]*ரோமக் குடிமகனைக் கட்டி வைப்பதென்பது தவறான செயலாகும் என்று சிசரோ அவர்கள் கூறினார். இருப்பினும், பின்னால் பவுல் ரோமாபுரியில் இரண்டு ஆண்டுகள் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருந்தார் (28:20). ஒருவேளை சேனாதிபதி, பவுல் சங்கிலிகளால் கட்டப்பட்டதைப்பற்றிப் பயந்திருக்காமல், சவுக்கால் அடிப்பதற்கு வாரினால் அழுந்தக் கட்டப்பட்டதற்காகப் பயந்திருக்கலாம் (22:24). வசனம் 29ல், மூல மொழியில் "அவரை கட்டுவித்தார்கள்" என்று மட்டுமே உள்ளது. "சங்கிலிகளால் கட்டுவித்தார்கள்"* (KJV) *என்றில்லை.* [26]Rick Atchley *யின் பிரசங்கத்திலிருந்து.*

## பவுலின் வாழ்க்கை வரலாறு பற்றிய நாள் வரிசைக்கான ஒரு கருத்து

| ஆண்டு | நிகழ்ச்சி | நடபடிகளில் காணப்படுவது |
|---|---|---|
| *கி.பி. 1 (?)* | *பிறப்பு* | - |
| *34* | *மனமாற்றம்* | *9* |
| *46-48* | *முதலாம் ஊழியப்பயணம்* | *13-14* |
| *49* | *எருசலேமில் மாநாடு* | *15* |
| *49-52* | *இரண்டாம் ஊழியப்பயணம்* | *16-18* |
| *53-57* | *மூன்றாவது ஊழியப்பயணம்* | *19-21* |
| *57* | *எருசலேமில் கைது செய்யப்படுதல்* | *21-22* |
| *57-60* | *செசரியாவில் சிறை வைக்கப்படுதல்* | *23-26* |
| *60* | *ரோமாபுரிப் பயணம்* | *27-28* |
| *61-63* | *ரோமாபுரியில் முதலாம் சிறை வைப்பு* | *28* |
| *66-67* | *ரோமாபுரியில் இரண்டாம் சிறை வைப்பு* | - |
| *67* | *மரணம்* | - |